DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 272/2019**

| Deposition of the | : | PW1 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | முனியசாமி | Age | : | 48 |
| F/N | : | பக்கிரி | Occupation | : | செண்டரிங் |
| Village | : | ஏர்வாடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of December 2024.

**12.12.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் குடியிருந்து கொண்டு செண்டரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 06.08.2018–ம் தேதி காலை 05.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது என் அம்மா குப்பையை கொட்டி விட்டு ECR ரோட்டில் கால்நடை மருத்துவமனை அருகே எங்கள் வீட்டிற்கு திரும்பி வரும்போது ரோட்டின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாக வந்த இருசக்கர வாகனம் எனது அம்மா மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் என் அம்மாவுக்கு பிடரியிலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டது. நானும், என் அக்கா பிச்சையம்மாள், என் தங்கை மாரியம்மாள் அனைவரும் சென்று என் அம்மாவை தூக்கி ஆம்புலன்ஸ் மூலம் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதல் சிகிச்சை பெறப்பட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்னர் ஏர்வாடி தர்ஹா காவல்நிலையம் சென்று நான் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கேட்டு புகார்மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மறுநாள் சிகிச்சை பலனின்றி எனது அம்மா மருத்துவமனையில் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறுவிசாரணை – இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.11 17:24:33 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**

**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 272/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | பிச்சையம்மாள் | Age | : | 50 |
| H/N | : | சண்முகவேல் | Occupation | : | கூலிவேலை |
| Village | : | கடலாடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of December 2024.

**12.12.2024**
**(எதிரி ஆஜர்).**
**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் குடியிருந்து கொண்டு கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு காலை 05.30 மணியளவில் என் அம்மா குப்பையை கொட்டி விட்டு வீட்டிற்கு ஏர்வாடி ECR ரோட்டில் உள்ள கால் நடை மருத்துவமனை அருகே திரும்பி வரும்போது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து என் அம்மா மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் எனது அம்மாவிற்கு பிடரியில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அருகில் இருந்த எனது தம்பி, நான், எனது தங்கை மற்றும் அருகில் இருந்த நபர்கள் அனைவரும் ஆம்புலன்ஸ் மூலம் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சேர்த்தோம். சிகிச்சை பலனின்றி மறுநாள் என் அம்மா மருத்துவமனையில் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறுவிசாரணை – இல்லை**

PRABHAKARAN G
Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.11 17:24:44 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 272/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | மாரியம்மாள் | Age | : | 45 |
| H/N | : | ராபர்ட் | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | ஏர்வாடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of December 2024.

**12.12.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 06.08.2018-ம் தேதி காலை 05.30 மணியளவில் என் அம்மா குப்பையை கொட்டிவிட்டு ஏர்வாடி ECR ரோட்டில் உள்ள கால்நடை மருத்துவமனை அருகே வீட்டிற்கு திரும்பி வரும்போது ஏர்வாடியில் இருந்து இராமநாதபுரம் நோக்கி ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்த இருசக்கர வாகனம் என் அம்மாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது அம்மாவிற்கு பிடரியில் காயம் ஏற்பட்டது. உடனே கீழக்கரை அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மறுநாள் சிகிச்சை பலனின்றி எனது அம்மா மருத்துவமனையில் இறந்துவிட்டார். அ.சா.1 நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்கக்கேட்டு ஏர்வாடி காவல்நிலையத்தில் புகார்மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறுவிசாரணை - இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.11 17:24:52 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**

**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 272/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | சேது | Age | : | 75 |
| F/N | : | பக்கிரி | Occupation | : | ரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு |
| Village | : | ஏர்வாடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of December 2024.

**12.12.2024**
**(எதிரி ஆஜர்).**
**முதல் விசாரணை**

நான் இரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.08.2018-ம் தேதி மாலை 06.30 மணியளவில் நானும், காளீஸ்வரன் என்பவரும் அருந்ததியர் காலணி அருகே நின்றுகொண்டிருந்தபோது ஏர்வாடி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வைமகஜரில் நானும், காளீஸ்வரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். (**பார்வைமகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**மறுவிசாரணை – இல்லை**

PRABHAKARAN G
Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.11 17:25:01 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 272/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | காளீஸ்வரன் | Age | : | 27 |
| F/N | : | செல்லையா | Occupation | : | மனநல காப்பக வார்டன் |
| Village | : | ஏர்வாடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 12th day of December 2024.

**12.12.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் குடியிருந்து கொண்டு மனநல காப்பகத்தில் வார்டனாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2018–ம் தேதி மாலை 06.30 மணியளவில் நானும், சேது என்பவரும் ஏர்வாடியில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனை அருகே நின்றுகொண்டிருந்தபோது ஏர்வாடி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வைமகஜரில் நானும், சேது என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**மறுவிசாரணை – இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.11 17:25:08 +0530

**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**